செ.வெ.எண் : 375 நாள் : 23.06.11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 22.6.2011

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், உளிசேநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னப்பா என்பவரின் மகன் நாராயணப்பா 19.6.2011 அன்று காட்டு யானை தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

திரு நாராயணப்பாவை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளதுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

1/1

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை.